**தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 14,832,776 ஆக இருந்த போதிலும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 364,494 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 14,468,282 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 31 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானமற்ற பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக திணைக்களம் சேகரித்த வருமானம் என்பதனால் இத்திணைக்களத்தின் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை என் குறிப்பிடுகின்றேன். |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 281,129,291 ஆக இருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 266,846,667 ஆகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 14,282,624 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் வருமானமற்ற பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப்பாய்ச்சில்ன கீழ் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 266,846,667 ஆக இருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தோற்றிய காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 5,066,556 தொகையான வருமான பெறுவனவுகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவையை கைவிட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களின் ரூபா 157,894 மொத்த தொகையான இடர் மற்றும் விழா முற்பணக் கடன் மீதிகள் 02 ஆண்டுகளிலிருந்து 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டதுடன் அக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு சேவையை விட்டுச் செல்லும் அறிவித்தல், வழங்கப்பட்டுள்ளதுடன், கடன் பணத்தை உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் பதில் வழங்கப்படவில்லை. பிரதேச செயலகங்களிடம் இந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கின்றேன். |

## 1.6.4 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **கிடைக்கின்ற காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளுக்கான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகளின் மூலம் கிடைக்கின்ற பணத்தை பதிவு செய்து கொள்ளும் வகையில் காசோலைகள் தொடர்பான பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் காசோலைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் முதலியவற்றுக்கான பதிவேட்டினை எதிர்காலத்தில் முறையாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணத்தின் 454(2) இன் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து மின்சார துணைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஒரு பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் மின்சார துணைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஒரு பதிவே்டு பேணப்படுதல் வேண்டும். | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு எதிர்காலத்தில் முறையாகப் பேணப்படும் என தெரிவிக்கின்றேன். |
| (இ) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்கப்படக்கூடிய வகையில் பொறுப்புக்கள் தொடர்பான ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பேணப்படுவதாக தெரிவிக்கின்றேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனாநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டின் யூலை மற்றும் ஒக்தோபர் மாதங்களில் விபத்துக்கு உள்ளாகிய 02 வாகனங்கள் சம்பந்தமாக பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டங்களுக்கான பூரண அறிக்கை உடனடியாக சமர்ப்பிக்கப்படுமென தெரிவிக்கின்றேன். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தமான பிரதான திருத்தங்கள் செய்ததன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், 23 வாகனங்களுக்குரிய வாகனங்களுக்குரிய எரிபொருள் பரிசோதனை இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிக்கப்படுதல் வேண்டும். | நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் காரணமாக எரிபொருள் பரீட்சிக்கப்படவில்லை எனவும் எதிர்காலத்தில் அப்பரிசீலனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீடு 20.02.01.03 இன் கீழ் மாகாணங்களுக்குள்ளே வவசாய குடியிருப்பு பிரதேசங்களில் காரணிகளின் குத்தகை வருமானத்தை சேகரிப்பது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்படுவதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 35,467,605 தொகையான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை வருமானத்தை உரிய ஆண்டிலேயே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குத்தகைதாரர்கள் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து குத்தகைப் பத்திரத்தை வழங்கும் வரையான காலத்திற்காக அறவிடப்படுகின்ற குத்தகைப் பணத்தை தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் குத்தகைப் பணத்தை குறைப்பதற்கு விடுவிக்கப்பட்ட வேண்டுதல்களுக்காக தீர்மானத்தை வழங்குதல் தாமமடைந்தமை. மேலும் குத்தகைப் பத்திரம் வழங்காது பயன்படுத்தும் உரிமையை ஒப்படைக்கும் போது குத்தகைப் பணத்தை செலுத்தத் தவறியமை சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளின் மூலம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் தடையாக இருத்தல். |
| (ஆ) | மாகாணங்களுக்கிடையே விவசாய குடியிருப்பு பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் குத்தகை வருமானத்தை சேகரித்தல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பிரதேசங்களில் அரசாங்க காணிகளை நிருவகித்தல் மற்றும் நிருவாகம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்யும் முழுமையான அதிகாரமானது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதன் மேற்பார்வை நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் | அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் 91 ஆம் பிரிவு 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்பீ/01/10 ஆம் இலக்க அரச முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி செயலக சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானத்தை அறவிட வேண்டியுள்ள நிலுவை வருமானத்தை | குத்தகை வழங்கும் நடைமுறையானது நில அளவையாளர் திணைக்களம், பிரதேச செயலகம், ஆகிய பல நிறுவனங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் செயற்பாடாக இருப்பதனால், ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாக கைத்தொழில் பேட்டைகளின் நிலுவைக் குத்தகை தாரர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தினாலும் குத்தகையை அறவீடு செய்வதில் சிக்கல் உருவாகியுள்ளது என தெரிவிக்கின்றேன். அவ்வாறே எதிர்காலத்தில் 03 மாதங்களுக்கு ஒரு தடைவ மாகாண சபைகள் சேகரிக்கின்ற குத்தகை வருமானம் சம்பந்தமான தகவல்களை பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் |

| | | |
|---|---|---|
| காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,656.59 மில்லியன் வருமனம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கும் அறவீடு செய்ய வேண்டியுள்ள நிலுவை வருமானம் சம்பந்தமான மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தெரிவிக்கின்றேன். |

**2.2 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 05 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 46,500,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 23,821,261 பணம் சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதிஏற்பாட்டில் 45 சதவீதத்திலிருந்து 100 சதவீதம வரையான வீச்சுடைய அளவாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். | திட்டமிடப்பட்டவாறு வேலைகள் இடம்பெற்றிருந்தும் கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வற்கு முடியாமையால் பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ளது. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டு அளவை மிகைத்து செலவுகள் அல்லது பொறுப்புக்கள் ஏற்படுத்தலாகாது என்ற போதிலும், 03 செலவு விடயங்களுக்காக நிதிஏற்பாட்டினை மிகைத்து ரூபா 872,714 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டுக்குள் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்காக கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்ய முடியாத பொறுப்புக்கள் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிஏற்பாட்டிலிருந்து தீர்த்து வைப்பதற்கு ஏற்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான செயற்பாடுகளை நிறைவேற்றும் தேவைப்பாட்டின் பேரில் பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளது எனக் |

குறிப்பிடுகின்றேன்.

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மிஹிகத மெதுர கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய ரூபா 66.21 மில்லியன் தொகையான ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிதித்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மிஹிகத மெதுர கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள திருத்தங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான மதிப்பீடு பொறியியல் செயற்பாடு தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அக்குறைபாடுகளை எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 செயற்பணி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ‘‘ஒரு தேசிய கொள்கைகக்குள் சிறந்த ஒருங்கிணைப்புடன் அபிவிருத்தியில் நிலைத்திருத்தல் என்பனை உறுதிப்படுத்தி அரசாங்க காணிகளை சிறந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டி தெளிவான காணி உரிமையை உறுதிப்படுத்தும் முறையான முகாமைத்துவத்தை பேணுதல்’’ என்ற செயற்பணியை அடைந்து கொள்வதற்கு திணைக்களத்தின் முகாமைத்துவத்திற்குரிய காணிகளின் அளவு மற்றும் அவற்றிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட காணியின் அளவை இனங்கண்டு ஒரு பதிவேட்டினைத் தயாரித்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அத்துமீறிய | செயற்பணிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கையில் முழுமையான காணிகளையும் அளவீடு செய்யாததன் காரணமாக காணி ஆணையாளர் திணைக்களத்தின் முகாமைத்துவத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகளின் அளவை தெளிவாக இனங்கண்டு கொள்ளாது. |

குடியிருப்பாளர்களை இனங்கண்டு அவர்கள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் முடியாதிருந்தது.

## 3.2 எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் காணி முகாமைத்தவு முறைமைய தோற்றுவித்து 2013 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வருவதுடன் அதற்காக 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 115.71 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து காணிகள் சம்பந்தமான தகவல்கள் இதுவரை அந்த முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்காததன் காரணமாக குத்தகையை அறவீடு செய்யும் சம்பந்தமான தேவையான தகவல்கள் இந்த முறைமையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் காணிகள் சம்பந்தமாக தகவல்களைப் பகுப்பாய்வு பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் தரவுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | 1931 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தின் காணிகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை உள்ளடக்குவதற்கு துறைக்கு செல்ல வேண்டியிருப்பதனால் அடுத்து வரும் 05 ஆண்டுகள் காலத்தில் பழைய தகவல்களை உள்ளடக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் ரூபா 7.5 மில்லியன் பெறுமதியான ஒரு வாகனத்தை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சட்ட ரீதியாக ஒப்படைக்காது காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் பயன்பாட்டிற்கு வழங்கியிருந்தது. | வாகனத்தை விரைவாக மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டரீதியாக அந்த அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) நில அளவையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 7.12 மில்லியன் பெறுமதியான ஒரு | வாகனங்களின் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு | இந்த வாகனங்கள் அனைத்தையும் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நில |

| | | |
|---|---|---|
| வாகனம் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 11.4 மில்லியன், பெறுமதியான 02 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 48.54 மில்லியன் பெறுமதியான 7 வாகனங்கள் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட போதிலும் அந்த வாகனங்களை சட்ட ரீதியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அளவையாளர் திணைக்களத்திடமிருந்தும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிடமிருந்தும் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அந்த வாகனங்களை சட்டரீதியாக பொறுப்பேற்பதற்கான தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றது. |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) விவசாய அமைச்சிற்குச் சொந்தமான ஒரு காணியில் ரூபா 36.40 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லமானது காணிகளை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தினதும் சுற்றாடல் அதிகாரசபையினதும் முன் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | காணியின் உரிமையைத் தீர்த்து வைப்பதற்கும் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிட திணைக்களத்தினூடாக நிலத்தை தயார்படுத்தி கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் காணியின் தெளிவான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) திம்பிரிகஸ்யதய பிரதேச செயலகப் பிரிவில் 29.88 பேர்ச்சர்ஸ் அரசாங்க காணி நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் வரையறுத்த சுயாதீன தொலைக்காட்சி சேவைகள் நிறுவனத்திற்கு | காணிகளை பயன்படுத்தும் உரிமையை ஒப்படைத்த உடன் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை குத்தகை தாரருக்கு | குத்தகைக்கு வழங்கும் நடைமுறையின் போது பல நிறுவனங்கள் சம்பந்தப்படுவதனால் குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுக்கின்றது எனவும் குத்தகைப் பணத்தை செலுத்துவதில் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தும் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை தெரியப்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்கான உரிமை ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்ததுடன் பயன்படுத்துவதற்கான உரிமை ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகள் காலம் எதுவித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யவுள்ள நிலுவைக் குத்தகைப் பணம் ரூபா 14,725,384 ஆகும். எவ்வாறாயினும், காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது சட்டரீதியான தன்மையைப் பாதுகாக்கும் வகையில் குத்தகைப் பத்திரம் வழங்கப்படாதிருந்தமை காரணமாக குத்தகைப் பணத்தை செலுத்தாமை சம்பந்தமாக குத்தகைக் காரருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் இயலுமை இல்லாதிருந்தது. | தெரியப்படுத்த வேண்டியிருந்ததுடன் தாமதமாக குத்தகைக் காரருடன் சட்டரீதியான உடன்படிக்கைகைய மேற்கொள்வதன் மூலம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாமதம் சம்பந்தமாக குத்தகைக்குப் பெற்ற நிறுவனத்துடன் கலந்துரையாடுவதாகவும் எதிர்காலத்தில் குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (இ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் 1.163 ஹெக்டயர் (416 பேச்சஸ்) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி நீண்ட காலக் குத்தகையின் கீழ் 1956 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்காக ஒரு விளையாட்டுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் 17 ஆண்டுகள் கால குத்தகை உடன்படிக்கை இன்றியும் குத்தகைப் பணத்தை செலுத்தாமலும் உரிய காணி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 34,061,250 | குத்தகைக்கு வழங்கிய காணி சம்பந்தமாக முறையான ஒரு பதிவேட்டைப் பராமரித்து குத்தகை காலம் முடிவடைந்த உடன் காலம் நீடிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் சட்டரீதியான உடன்படிக்கையை மேற்கொள்வதன் மூலம் குத்தகைப் பணத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குத்தகைக் காலத்தை நீடிக்குமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுதல் குத்தகைதாரரின் பொறுப்பு என்பதும் குத்தகை உடன்பட்கையின் காலத்தை நீடிப்பதற்காக உரிய குத்தகை சிபார்சானது பிரதேச செயலாளரால் தாமதித்தே சமர்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிப்பதுடன் குத்தகைக்குப் பெற்ற நிறுவனத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் நிலுவைப் பணம் முழுவதையும் |

| | | |
|---|---|---|
| தொகையான குத்தகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் சட்டரீதியான தன்மையை ப் பாதுகாக்கும் வகையில் குத்தகைப் பத்திரம் வழங்கப்படாததன் காரணமாக குத்தகைப் பணத்தை செலுத்தத் தவறியமை சம்பந்தமாக குத்தகைதாரருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான இயலுமை இல்லாதிருந்தது. | | செலுத்துவதற்கு இணங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கின்றேன. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பதவிகளில் 329 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 06 காணி ஆணையாளர் பதவிகள் 115 குடியிருப்பு உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 06 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தடையாக இருந்தது. | திணைக்களத்தின் குறிக்கோள்களையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக தேவையான மனித வளங்களை பூரணப்படுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |